**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-17 No. 04 October-December 2023**

# இராமேசுவரத்திலுள்ள பழமையான கோயில்கள்

**திருமதி.ஆ.தங்கம்மாள்,**
ஆய்வாளர்
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தமிழ்த்துறை,
ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் அறிவியல் கல்லூரி, கரூர் 639005
பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது. நெறியாளர்

**முனைவர் சு.இளவரசி,**
ஆய்வு நெறியாளர்,
தமிழாய்வுத்துறை,ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் அறிவியல் கல்லூரி,
கரூர் 639005.

**ஆய்வுச் சுருக்கம்** :
இராமேசுவரத் தீவிலுள்ள பிறசமயக் கோயில்களைப் பற்றி ஆராயப்பட்டது. சைவ சமயக் கடவுளான சிவபெருமானின் கோயிலாக விளங்கும் இராமநாதசாமி கோயிலும் மேலும் அத்தீவில் உள்ள மற்ற கோயில்களையும் நேரில் கண்டு ஆய்வு செய்யப்பட்டது. பௌத்த சமயக் கோயிலான பத்தினி அம்மன் கோயிலும் உள்ளது. மஹாபாரதம் தொடர்பான கோயில்களும் தீர்த்தங்களும் உள்ளன. நம்புநாயகி அம்மன் கோயில், பத்ரகாளி கோயில், இரட்டைத் தலை முனியசாமி கோயில் போன்றவை மிகவும் பழமை வாய்ந்தவை ஆகும். அக்கோயில்களைப் பற்றியும் அவை உருவானவை பற்றியும் இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்** : பழமைவாய்ந்த கோயில்கள், தீர்த்தங்கள் வனைவு பெற்றது.

## முன்னுரை :

இராமேசுவரம் என்னும் புண்ணியத் தீவில் அனைத்துச் சமயக் கோயில்களும் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. சைவ சமயக் கோயிலான சிவனை மையமாகக் கொண்ட இராமநாதசாமி கோயில் உலகச் சிறப்பு வாய்ந்தது. வைணவக் கடவுளின் அவதாரமான (விஷ்ணு) இராமன் வந்து சிவனை வழிபட்டதால் இராமநாதச்சாமி ஆயிற்று. இராமாயணக் காலத்திற்கு முன்பே சிவத்தலமாக , மஹாபாரதத்திலும் கூறப்பட்டிருக்கிறது. அதற்கான கோயில்களும் தீர்த்தங்களும் உள்ளன. பௌத்த சமயக் கோயிலான பத்தினி அம்மன் கோயிலும் உள்ளது. இது போன்ற மிகவும் பழமை வாய்ந்த பிற சமயக் கோயில்களைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.

**ANCIENT TEMPLES IN RAMESWARAM**

**ABSTRACT**
The research on other religious temples on Rameswaram Island has been mentioned. Ramanathasamy temple, the temple of Lord shiva, and other temples on the Island were also visited and researched. Pathini Amman, a Buddist temple and other temples and Shrines related to the Mahabaratha were also taken into consideration. The temple of Amman in Nambunayaki, Bhathrakali amman, Rettai thalai Muniyasamy temple are very old. The way in which the temples were found and the importance of the temple were taken into consideration.

ISSN: 2320-4842
Vol-17 No. 04 October-December 2023

## இராமேசுவரம் தீவில் சிறப்புப் பெற்ற கோயில்கள்

**நம்பு நாயகி அம்மன் வரலாறு** :

தட்சிணத்துருவன், பச்சிமத்துருவன் என்ற இரண்டு முனிவர்களின் கடுமையான தவத்தைக் கண்டு தேவி பர்வதவர்த்தினி காளி வடிவில் நேரில் காட்சியளித்ததால் தட்சிண காளியாக பெயர் பெற்றதாகவும், அன்றிலிருந்து இரண்டு முனிவர்களும் அந்தக் காட்டிலேயே காளியை வழிபட்டு வந்ததாகவும், அவரின் அருளால் பிணியுற்றவர்களுக்கு நோய் போக்கும் பணியை செய்து வந்ததாகவும் கூறப்படுகிறது. இரண்டு முனிவர்களும் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு கற்பகோடி காலம் கண்டவர்களாய் இப்பகுதியிலேயே ஆழ்ந்த உறக்கத்தில் சமாதியிலிருந்து வருவதாகவும் நம்பப்படுகிறது.

இராமேசுவரம் சிங்களர்களின் பிடியில் இருந்த போது சூலோதரன் என்ற சிங்கள மன்னன் இந்த தீவில் வடக்குப் பகுதியில் உள்ள உயரமான மண்குன்றில், கோட்டை ஒன்றை அமைத்து ஆட்சி செய்து வந்தான். அந்த மன்னனுக்கு தீராத நோய் கண்டு எந்த மருத்துவமும் பயனளிக்காத நிலையில் தட்சிண காளியின் கோயிலுக்கு வந்து சேர்ந்தான். உடன் இருந்த சகோதரர்கள், அமைச்சர்களின் கேலிப் பேச்சுக்கு இடையில் நம்பிக்கையுடன் அங்குள்ள கோயில் தீர்த்தத்தில் நீராடி அம்மனை வழிப்பட்டதாக வரலாறு உள்ளது.

**உள்ளூர் மக்கள் கூறும் வரலாறு** :

சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பு இராமேசுவரம் தீவில் உள்ள இந்தப் பகுதி தான் மரங்கள் நிறைந்த வனமாக விளங்குகிறது. ஒரு சமயம் விறகு வெட்டுபவர் இங்குள்ள தாழை மரங்களை வெட்டும் போது ஓரிடத்தில் இரத்தம் பீறிட்டு வந்தது. உடனே அவர் பயந்து போய் ஊர்மக்களை அழைத்து வந்துள்ளார்.

அப்போது ஒருவருக்கு அருள் வந்து, இந்தப்பகுதியில் நான் தாழைவன அம்மனாக பூமியில் மறைந்துள்ளேன். என்னை வெளியே எடுத்து வழிபடுங்கள் என்னை நம்புங்கள் என்று கூறியதால் அப்பகுதி மக்கள் அவ்வாறே செய்து வழிபட்டு வருகின்றனர்.

திருமணத்தடை, குழந்தையின்மை ஆகியவற்றிற்கு வேண்டுதல் வைத்து நிவர்த்தியானதும் நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். இங்கு அரைத்துக் கொடுக்கப்படும் மஞ்சள் காப்பு சகல நோய்களைத் தீர்ப்பதாகவும் மனநோயைத் தீர்க்கும் மருந்தாகவும் பயன்படுகிறது.

**ஆலய அமைப்பு** :

தென்கிழக்கு நோக்கிய ஆலயம் சுற்றிலும் மணல் திட்டுகள், மரங்கள் என இயற்கை எழிலாக அமைந்துள்ளன. ஆலயத்தின் உள்ளே விநாயகர், பனைமரத்து பீடம், காளியம்மன் பீடம், சங்கிலிகருப்பன் பீடம், இரட்டைத் தாழை முனீஸ்வரர் பீடம் ஆகியவை அமைந்துள்ளது. வடக்கில் தல தீர்த்தம், கருப்பண்ணசாமி, அய்யனார், ராக்காயி அம்மன், பேச்சியம்மன், கருப்பாயி அம்மன், இருளாயி அம்மன், ஆலமரத்தின் கீழ் தர்ம முனிஸ்வரர் அருள் புரிகிறார். தெற்கே இருளப்பசாமி பீடம், மாடசாமி பீடம் ஆகியவை அமைந்துள்ளது.

ஆலமரத்திலிருந்து சில அடி தூரம் சென்றால் தாழை மரங்களுக்கிடையில் அமுத தீர்த்தம் உள்ளது. பல காலமாக கண்டுபிடிக்கப்படாமல் இருந்த இத்தீர்த்தம் விவேகானந்தா கேந்திரா பசுமை இராமேசுவரம் குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது என்பதனை ஆய்வால் அறிந்து கொள்ள முடிந்துள்ளது.

இக்கோயில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மக்களால் குலதெய்வமாகவும், காவல் தெய்வமாகவும் விளங்குகிறது. ஆரம்ப காலத்தில் மராட்டிய அந்தணர்கள் மட்டுமே வழிபடும் தெய்வமாக இருந்தது என்பது நினைவு கூறப்படுகிறது. தற்போது அனைத்து மக்களும் நம்பிக்கையுடன் வணங்கி நம்பு என்ற பெயரைச் சேர்த்து குழந்தைகளுக்கு பெயரிடுகின்றனர். இந்து மதக் கடவுகளாக இருந்தாலும் முஸ்லீம் மக்களும், கிறிஸ்தவர்களும் வந்து வணங்கிச் செல்கின்றனர். நம்பு என்ற பெயருடன் அவர்களின் மதத்தின் பெயரையும் சேர்த்து வைக்கின்றனர் என்பது இக்கோயிலின் சிறப்பு ஆகும்.

இராமேசுவரத்தின் வடக்கில் உள்ள பத்திரகாளி அம்மன் காவல் தெய்வமாக உள்ளது. பத்திரகாளியம்மனின் தங்கை தான் நம்புநாயகி அம்மன் என்றும் தன் அக்காவின் குழந்தைகளை காணச் செல்லும் போது பத்திரகாளி தன் குழந்தைகளைப் பார்த்து ஏங்கி கண் வைத்து விடக் கூடாது என்பதற்காக குழந்தைகளை கூடையில் வைத்து மறைத்து வைத்தாள். அதனால் கோபமுற்ற நம்புநாயகி அம்மன் குழந்தைகளை கல்லாகப் போகுமாறு சபித்ததாகவும், இன்னும் பத்திரகாளி கோயிலில் 7 கற்சிலைகள் உள்ளதாகவும் ஒரு வரலாறு உண்டு. இன்னும் இக்கோயிலில் அதனைக் காணலாம். கோயில் காலை 6.00 மணி முதல் 11.00 மணி வரை திறக்கப்படும்.

**பத்திரகாளியம்மன் கோயில்** :

கம்ப இராமாயணத்துடன் தொடர்புடையதாக இக்கோயில் அறியப்படுகிறது. மிகவும் பழமை வாய்ந்த கோயிலாததால் பெரும்பாலான கட்டிடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளது.

**கோயில் வரலாறு** :

இராவணன் சீதையை கடத்திக் கொண்டு போய் இலங்கையில் வைத்திருக்கும் போது, இராமன் சீதையைக் காணாமல் அனைத்து இடங்களிலும் தேடிக் கொண்டு வரும் போது, சடாயு மூலம் அரக்கன் ஒருவன் தென்திசை நோக்கி கடத்தி சென்றதாக அறிகின்றனர். அதன் பின்னர் அனுமனின் நட்பு கிடைத்தது. இலங்கை செல்ல தகுதியானவராக அனுமன் தேர்ந்தெடுக்கப்பட்டு அவரை சீதையை கண்டு வருமாறு அனுப்பினர். அனுமன் இராமனது கட்டளைக்கிணங்கி இலங்கைக்குள் செல்லும் போது அங்கு காவல்தெய்வமாக விளங்கும் பத்திரகாளியம்மன். பார்வதி தேவியின் அம்சமான காளியை எதிர்த்து உள்ளே செல்ல முடியாது என்பதை அறிந்த அனுமன், சீதா தேவியின் நிலையை எடுத்துக் கூறி இராமன் தன்னை அனுப்பியதாக கூறுகிறார். இதனால் அமைதியடைந்த பத்திரகாளியம்மன் அனுமதி கொடுத்ததால் அனுமன் இலங்கையினுள் நுழைந்து சீதா தேவியைக் கண்டு வருகிறார். இதனை அறிந்து கோபமுற்ற இராவணன் தனக்கு குலதெய்வமாய் இருந்த அம்மன் எதிரிக்கு வழிவிட்டதை எண்ணி அங்கிருந்த சிலையை தூக்கி எறிந்ததாக கூறப்படுகிறது. அச்சிலையே இங்கு இருப்பதாகவும் கூறுகின்றனர்.

**அமைந்துள்ள இடம்** :

இவ்வாறு எறியப்பட்ட சிலை மிகவும் உக்கிரமாக இருந்ததால் பூசை செய்ய யாரும் முன் வர பயந்தனர். எனவே அம்மன் சிலையை சாந்தமாக மாற்ற முடிவு செய்து வேறு சிலை செதுக்கப்பட்டது. ஆனாலும் பழைய சிலையை வண்டிகள் வைத்து இழுத்தும் அசைக்க முடியாததால் புதியதாக செய்த சிலையை அதன் அருகிலேயே வைத்து வணங்கி வருகின்றனர் என்பதும் தெரிய வருகின்றது.

இராமநாதசாமி கோவிலிலிருந்து வடக்கில் 2 கி.மீ தொலைவில் பத்திரகாளியம்மன் காவல் தெய்வமாக விளங்குகிறாள். இக்கோயிலின் அருகில் திரௌபதி தீர்த்தம் உள்ளது.

**கூனி மாரியம்மன் கோயில்** :

இக்கோயில் தனுசுகோடியில் உள்ளது. இராமேசுவரத்திலிருந்து தனுசுகோடி செல்லும் பாதை ஓரத்திலேயே உள்ளது. 1964 ல் ஏற்பட்ட புயலால் தனுசுகோடி அழிந்த நிலையில் எஞ்சிய கோயில் இது புயல் ஏற்பட்ட போது இக்கோயிலில் எரிந்து கொண்டிருந்த அகல் விளக்கு தண்ணீரில் மிதந்து கொண்டு அணையாமல் இருப்பதாகக் கூறுகிறார்கள். சாலையிலிருந்து பள்ளமான பகுதியில் உள்ளது. இங்கு இராமர் பாதம் உள்ளது. அப்பாதத்தில் எழுத்துக்கள் உள்ளது.

“இராமன் பாதம் பட்ட மண்ணைத் திரட்டி
பாதம் செய்து வழிபட்டால்” அனைத்துப் பூலோகத்திலுள்ள எல்லா
புண்ணிய தலங்களையும் தரிசித்த பலன் கிடைக்கும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன என்று எழுதப்பட்டுள்ளது.

**உச்சையினி மகாகாளி அம்மன்** :

உச்சையினி மகாகாளியம்மன் கோயில் கடற்கரையிலிருந்து இராமநாதசுவாமி கோயில் செல்லும் வழியில் இடப்பக்கமாக அக்னிதீர்த்தக் கரையில் அமைந்துள்ளது. அம்மன் மேற்கு நோக்கி அமர்ந்து இராமநாதசாமியை நோக்கியவாறு தவமியற்றிக் கொண்டிருக்கிறாள். இங்கு பத்து நாட்கள் நவராத்திரி திருவிழா நடைபெறும். இக்கோயில் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. நவராத்திரித் திருவிழாவின் போது பூக்குழி இறங்குதல் நிகழ்வு நடைபெறும். அன்று காலை அனுமன் சந்நிதியிலிருந்து சுடப்படாத கலயத்தில் வைக்கப்பட்ட பூசைப்பொருட்கள் கொண்டுவரப்பட்டு அம்மனிடம் வைத்து பூசை செய்யப்படும். அம்மன் நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் சுற்றி வரும். பரம்பரை பூசாரியாக இருப்பவருக்கு அம்மனின் வேடமிட்டு செந்தூரத்தால் பூசி கரகம் எடுத்துச் செல்வார்கள். அம்மனுக்கு முன்னால் கருப்பண்ணசாமி காவலுக்குச் செல்வார். நிறைய பக்தர்களுடன் வீதி உலா நடக்கும். அவ்வாறு உலா வரும் போது அம்மன் வேடத்தில் இருக்கும் பக்தரின் பாதங்களில் மஞ்சள் நீரை ஊற்றி தெருவில் உள்ளவர்கள் தங்களின் அன்பை வெளிப்படுத்துவார்கள். பூசைப்பொருட்கள் உள்ள சுடப்படாத மண் கலசம் இலங்கையிலிருந்து வந்ததாக கூறப்படுகிறது. இராமர் இலங்கையை விட்டு புறப்பட்ட நிலையில் இலங்கையில் உள்ள மக்கள் சுடப்படாத மண் கலசத்தில் யந்திரம், திருமாங்கல்யம், பொட்டு ஆகியவற்றை வைத்து பாக்சலசந்தியில்

விட்டதாகவும், அது சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் இராமேசுவரத்தை வந்து அடைந்ததாகவும், அதனை எடுத்து உச்சையினி மாகாளியம்மனிடம் வைத்து பூசை செய்வதாகவும் கூறப்படுகிறது. இப்பூசைப் பொருட்களே அனுமன் சந்நதியில் வைத்து பாதுகாக்கப்படுகிறது.

**இரட்டைத் தலை முனீசுவரர் கோயில்** :

இராமநாதசாமி கோயிலிலிருந்து தனுசுகோடி செல்லும் சாலையில் கரையூர் என்னும் கிராமத்திற்கும், ஜடாதீர்த்தம் செல்லும் வழிக்கும் நடுவில் உள்ளது. இங்கு தாழை மரங்கள் காணப்படுகின்றன. இராமேசுவரத்தில் தென்திசை எல்லை காவல் தெய்வமாகும். இரட்டைத் தலை முனீசுவரர் என்பதற்கு சிம்மக்கனர், சரபேசுவரர் என்ற பெயர்களும் உண்டு. இவர் சிவனின் அம்சமாவார். விஜயநகர மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டது. இதற்கான சான்றாக தமிழ் கல்வெட்டு (வட்டெழுத்து ஒன்று உள்ளது) மீன்பிடித் தொழிலைச் செய்பவர்கள் இரட்டைத் தலை முனீசுவரருக்கு கிடாவெட்டி பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். சிவராத்திரி அன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகிறது. காற்றின் திசைக்கேற்பவே மீனவர்கள் படகுகளைச் செலுத்தி மீன்பிடிக்கச் செல்வார்கள். அவ்வாறு வடகடலிலிருந்து தென்கடலுக்குச் செல்லும் போதும், தென்கடலிலிருந்து வடகடலுக்குச் செல்லும் போதும் இரட்டைத் தலை முனீசுவரரை வணங்கி விட்டுச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். எண் திசை வணிகர்கள், வழிப்போக்கர்கள், மீனவர்கள் ஆகியோரின் காவல் தெய்வமாக விளங்குகிறார் இரட்டைத் தலை முனீசுவரர். சுமார் 1500 வருட பழமை வாய்ந்த கோயிலாகக் கருதப்படுகிறது. பழமையான சிவன் கோயில் இருந்ததாகவும், போர்ச்சுகீசியர் படையெடுப்பின் போது அச்சிவன் கோயில் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. கிபி 1480 இல் நடைபெற்ற போர்ச்சுகீசியர்களின் பீரங்கி தாக்குதலால் சிவன் கோயில் அழிக்கப்பட்டுள்ளது. இங்கு வெள்ளி, செவ்வாய் ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகிறது. இங்குள்ள பூசாரியின் இறப்பிற்குப் பிறகு அவருடைய மனைவியே பூசை செய்வார் என்பதையும் அறியமுடிகிறது.

**துர்க்கை அம்மன் கோயில்** :

இராமேசுவரம் திட்டகுடி தெருவில் அமைந்துள்ளது. தனிநபர் வழிபாட்டியல் முறைப்படி பூசைகள் நடைபெறுகிறது. கி.பி 15 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோயில். அம்மனின் பெயர் சூலினி துர்க்கை, மற்றொரு அம்மன் அதர்வன பத்ரகாளி, இருவரும் இங்கு அருள்புரிகிறார்கள். அதர்வன பத்ரகாளி என்பது ப்ருத்யுங்ரா தேவியின் மற்றொரு அம்சமாகும்.

> “ருண, ரோக, உப்பாத, உபத்திரவாத, சர்வபாதம், ஈதிபாத”

ஐந்துவித துன்பங்களையும் போக்குவதால் அம்மனுக்கு சமரேச துர்க்கா என்று பெயர். பெண்களுக்கான எல்லாவித துன்பங்களையும் போக்கும் இராகு கால பூசை இங்கு சிறப்பாகச் செய்யப்படுகிறது. நாகங்களின் அதி தேவதையாகவும் இருப்பதால் இராகு கால பூசை சிறப்புடன் செய்யப்படுகிறது.

வசந்தகால நவராத்திரி, சாரதீய, நவராத்திரி ஆகிய நவராத்தி உற்சவ விழாக்கள் நடைபெறும். நிகும்பல யாகம் நடைபெறும். மன்னர்கள் போருக்குச் செல்லும் முன் நிகும்பல யாகத்தில் தங்கள் போர்க் கருவிகளை வைத்து பூசை செய்து எடுத்துச் சென்றால் வெற்றி கிட்டும். கோயிலில் பழமையான வாள் கருவிகளும் உள்ளன.

**கரையூர் மாரியம்மன் கோயில்** :

இராமேசுவரத்திலிருந்து தனுசுகோடி செல்லும் சாலையில் இடப்புறம் கரையூர் கிராமம் உள்ளது. இங்கு மீனவர்கள் குடியிருக்கின்றார்கள். இராமேசுவரத்தில் உள்ள அனைத்து மக்களாலும், வணங்கப்படும் அம்மனாக கரையூர் மாரியம்மன் காட்சி அளிக்கிறாள். தீவில் உள்ள எந்த இடத்தில் அம்மை போட்டாலும் கரையூர் மாரியம்மன் கோயிலில் தீர்த்தம் வாங்கிச் சென்று அம்மை கண்டவர்களுக்குக் கொடுக்கிறார்கள். அவர்களின் உடல் நலமடைந்தவுடன் இங்கு வந்து தங்களுடைய வேண்டுதலை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். அனைத்து மதத்தினரும் இங்கு வந்து வழிபட்டுச் செல்வது அம்மனின் சிறப்பாகும்.

இராமேசுவரம் தீவில் மொத்தம் எட்டுத் திசைகளிலும் உள்ள கோயில்கள், மிகவும் பழமையான கோவில்கள் இராமர் கோயில் எட்டு. அம்மன் கோயில் எட்டு, ஆறு அய்யனார் கோயில், எட்டு காவல் தெய்வங்கள் ஆகியவை உள்ளன.

**எட்டு இராமர் கோயில்** :

1. **ஏகாந்த இராமர் கோயில்** :

தனுசுகோடியில் இருந்தது. கடற்கோளால் அழிவுற்றது. தற்போது பாம்பனிலிருந்து இராமேசுவரம் செல்லும் போது தங்கச்சி மடத்திற்கு அருகில் மதுரை, இராமேசுவரம் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. செகந்நாத இராமராக வீற்றிருக்கிறார்.

2.**கோதண்ட கல்யாண இராமர்** :

இராமேசுவரம் பேருந்து நிலையத்திலிருந்து அருள்மிகு இராமநாதசாமி கோயில் செல்லும் வழியில் சாலையின் வலப்பக்கம் அமைந்துள்ளது. மிகவும பழமையான கோயில் இங்கு இலட்சுமணர், சீதை ஆகியோருடன் இராமர் வில் அம்புகளுடன் நிறை கோலத்தில் அருள்புரிகிறார். அனுமன் அவர்களுக்கு பணிந்து இருப்பது போன்று சிலைகள் உள்ளன. இங்கு சீதா திருமணம் நடக்கும் நிகழ்வு மிகவும் சிறப்பானது. இக்கோயிலின் எதிரில் இராமர் தீர்த்தம் அமைந்துள்ளது. அஷ்டமி, நவமி நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். இராமநவமியன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படும். இக்கோயிலின் வலப்புறம் கிருட்டிணன் கோயில் அமைந்துள்ளது. இங்கு இராதா கிருட்டிணன் உடுப்பியில் உள்ளது போன்று அமைக்கப்பட்டுள்ளது. சிறப்பு கோவர்த்தன மலையில் கிருட்டிணனின் விளையாட்டுக்கள் இக்கோயிலின் உள்ளே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இராமரை வழிபட்டு கோயிலைச் சுற்றி வரும் போது வடதிசையில் முருகன் மயில் வாகனத்தில் அமர்ந்து அருள்புரியும் சிலை உள்ளது. செவ்வாய்க்குரிய கடவுளாக அறியப்படுகிறார். மிகவும் பழமையான வில்வ மரமும், மரத்தினடியில் சிறிய சிவலிங்கமும் நந்தியுடன் அமைந்து அருள்புரிகிறார்கள். அதனைச் சுற்றிலும் நாகதோச பரிகாரம் செய்யப்பட்ட நாகர் சிலைகளும் நிறைய உள்ளன.

**ஓலைக்குடாவில் உள்ள இராமர் கோவில்** :
இக்கோயில் கடற்கோளின் போது அழிவுற்றது என்பதை அறிய முடிந்துள்ளது.

**கோதண்ட இராமர் கோயில்** :
இராமேசுவரத்திலிருந்து தனுசுகோடி செல்லும் சாலையில் 15 கி.மீ தொலைவில் உள்ளது. இக்கோயிலில் வீடணன் சரணடைந்த இடமாக கூறப்படுகிறது. வீடணனுக்கு இலட்சுமணர் முடிசூட்டிய வரலாறு கோபாலன் சுவர்களில் மேல் ஓவியமாக வரையப்பட்டுள்ளது. இக்கோயில் சிறிய மணல் ஒன்றின் மேல் அமைந்துள்ளது. இராவணனின் தம்பியான வீடணன் இராமேசுவரம் வந்து இராமனிடம் அடைக்கலம் தேடி வரும் போது இலட்சுமணன் மிகவும் கோபம் கொள்கிறார். எதிரியின் தம்பியே ஆனாலும் அடைக்கலம் தேடி வந்தவரை அழிக்கக் கூடாது என இராமன் இலட்சுமணனிடம் எடுத்துக் கூறி அவரைத் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறார். மேலும் இராவணனுடன் சென்று போர் புரிவதற்கு முன்பாகவே வீடணனுக்கு முடிசூட்டி வைக்குமாறு இலட்சுமணருக்கு கட்டளையிடுகிறார். அவ்வாறே வீடணனுக்கு முடிசூட்டப்படுகிறது. இவ்விழா வருடந்தோறும் இக்கோயில் நடைபெறும். இராமேசுவரத்தில் உள்ள இராமநாதசாமி கோயிலிருந்து இராமர், இலட்சுமணர், அனுமன் முதலானோர் கோதண்ட இராமர் கோயிலுக்குச் சென்று அங்குள்ள வீடணனுக்கு முடிசூட்டும் விழாவை நடத்தி வைப்பார்கள்.

**இராமநாதசாமி கோயிலுக்குள் உள்ள இராமர் கோயில்** :
இராமநாதசாமி கோயிலின் மூன்றாம் பிரகாரத்தில் இராமலிங்க பிரதிட்டைக்குச் செல்லும் வழியில் உள்ளது.

**முடிவுரை** :
இராமேசுவரத்தீவில் உள்ள பழமையான கோயில்களையும், அவற்றின் சிறப்புகளையும் இக்கட்டுரையில் ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டு ஆராயப்பட்டது.

**கள ஆய்வு** :
நேரில் சென்று தகவலாளரிடம் செய்திகள் சேகரிக்கப்பட்டது.

**துணை நின்ற நூல்கள்** :

1) இராமேசுவரத் தல வரலாறு
2) இராமப்பையன் அம்மானை
3) இராமநாதபுரம் திருக்கோயில்கள்